இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 24-06-2024

# சாத்தான்குளமும் கள்ளக்குறிச்சியும்

**நா**ற்பது தொகுதியிலும் நாக்கை பிடுங்கிக் கொள்ளும் அளவுக்கு தோல்வியைத் தழுவி தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு வீட்டுக்குள் முடங்கியே கிடந்த பழனிசாமி, கள்ளக்குறிச்சி விஷச்சாராயச் சாவுப் பிரச்சினையில் அரசியல் ஆதாயம் தேடுவதற்கு நாக்கை தொங்கப் போட்டுக் கொண்டு வெளியே வருகிறார்.

“தூத்துக்குடி காவல் நிலையத்தில் இருவர் இறந்ததற்கு சி.பி.ஐ விசாரணை கேட்டார் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் . இப்போது கள்ளக்குறிச்சி விவகாரத்தில் நாங்கள் சி.பி.ஐ. விசாரணை கேட்கிறோம்” என்று மகாபுத்திசாலியைப் போல கேட்கிறார் பழனிசாமி.

கள்ளக்குறிச்சி விவகாரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்காமல் இருந்திருந்தால் - குற்றவாளிகளைக் காப்பாற்ற முயற்சித்திருந்தால் சி.பி.ஐ. விசாரணை கூட கேட்கலாம். ஆனால் அனைத்து நடவடிக்கைகளும் எடுத்ததைப் பார்த்த பிறகும் சி.பி.ஐ. விசாரணைக்கு அதில் என்ன இருக்கிறது?

கள்ளக்குறிச்சி சம்பவத்துக்கான உண்மையான காரணத்தை அறிய

★ **நீதியரசர் கோகுல் தாஸ் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.**

★ **சி.பி.சி.ஐ.டி. வசம் இந்த வழக்கு ஒப்படைக்கப் பட்டுள்ளது.**

★ **உள்துறை செயலாளரையும், டி.ஜி.பி.யை அறிக்கை தரச் சொல்லி இருக்கிறார்கள்.**

★ **குற்றவாளிகளில் பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். பலர் தேடப்பட்டு வருகிறார்கள்.**

★ **கள்ளச்சாராயம், விஷச்சாராயம் ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்கிறது.**

★ **இறந்தோர் குடும்பத்துக்கு ரூபாய் பத்து லட்சம் தரப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டோர் குடும்பத்துக்கும் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.**

★ **பெற்றோரை இழந்த பிள்ளைகளின் கல்வி, வாழ்க்கை பொறுப்பை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.**

★ **மாவட்ட ஆட்சியர் மாற்றப்பட்டுள்ளார்.**

★ **மாவட்ட எஸ்.பி. உள்ளிட்ட காவல் துறை அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள்.**

★ **மதுவிலக்குத் துறை ஏ.டி.ஜி.பி.யே கட்டாயக் காத்திருப்பில் வைக்கப் பட்டுள்ளார்.**

அனைத்து நடவடிக்கைகளும் 24 மணிநேரத்துக்குள் எடுக்கப்பட்ட பிறகு சி.பி.ஐ.க்கு இங்கே என்ன வேலை இருக்கிறது?

சாத்தான்குளம் காவல் நிலையத்தில் அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் இரண்டு பேர் அடித்தே கொல்லப்பட்டார்கள். காவலர்கள் சிலர் திட்டமிட்டுச் செய்த படுகொலை அது. அதனை அன்றைய அ.தி.மு.க. அரசு மறைத்தது.

**அன்றைக்கு சி.பி.ஐ. விசாரணை கேட்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது?**

சாத்தான்குளம் காவல் நிலையத்தையே மரண பலிபீடமாக அ.தி.மு.க. ஆட்சியில் மாற்றினார்கள். ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகிய இருவரையும் 20-க்கும் மேற்பட்ட காவலர்கள் அடித்தே கொன்றார்கள். இதுகுறித்து தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு கேள்விகளை எழுப்பிய பிறகும், ‘பென்னிக்ஸ் மூச்சுத் திணறலால் இறந்தார், ஜெயராஜ் உடல் நலம் பாதிக்கப்பட்டு இறந்தார்’ என்றும் அறிக்கை வெளியிட்டார் அன்றைய முதலமைச்சர் பழனிசாமி. ‘சி.பி.ஐ. விசாரணை கேட்டு தி.மு.க. நீதிமன்றத்தை நாடும்’ என்று தி.மு.க. தலைவர் அவர்கள் சொன்ன பிறகு தான், சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டார் பழனிசாமி.

‘காவலர்கள் மீது கொலை வழக்காக பதிவு செய்வதற்கான முகாந்திரம் உள்ளது’ என்று சொன்னது சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளை.

உயர்நீதிமன்ற நீதியரசர்களால் வரலாற்றில் முதல் முறையாக சாத்தான்குளம் காவல்நிலையம், காவல்துறையின் கட்டுப்பாட்டில் இருந்து எடுக்கப்பட்டு வருவாய்த்துறையின் கட்டுப்பாட்டில் ஒப்படைக்கப்பட்டது. இது அ.தி.மு.க. ஆட்சிக்கு ஏற்பட்ட மாபெரும் அவமானம் அல்லவா?

உயர்நீதிமன்ற நீதியரசர்களால் விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டவர் கோவில்பட்டி மாஜிஸ்திரேட் பாரதிதாசன். அவரை சாத்தான்குளம் காவல் நிலையத்தில் காவலர்கள் மிரட்டினார்கள். ‘உன்னால் ஒன்றும் …… முடியாது’ என்று காவலர் ஒருவர் மிரட்டியதாக மாஜிஸ்திரேட்டே நீதிமன்ற பதிவாளரிடம் புகார் செய்தார்.

இரண்டு நாள் வைத்திருந்து சாகும் அளவுக்கு தாக்கப்பட்ட நிலையில் கொண்டு வரப்பட்ட இரண்டு பேரை சாத்தான்குளம் அரசு மருத்துவமனை, சாத்தான்குளம் நீதிமன்றம், கோவில்பட்டி கிளை சிறை, கோவில்பட்டி அரசு மருத்துவமனை - ஆகிய அரசு எந்திரம் அனைத்தும் மறைக்கப் பார்த்தார்கள். உடல்நலம் பாதிக்கப்பட்டுதான் அவர்கள் இருவரும் இறந்தார்கள் என்று ஜடத்தைப் போல முடிவெடுத்து அறிவித்தது பழனிசாமியின் நிர்வாகம்.

“…கடையை மூடச் சொன்ன எங்களை மிரட்டிய ஜெயராஜும், பென்னீக்ஸும் தரையில் புரண்டார்கள். அதில் அவர்களுக்கு ஊமைக்காயம் ஏற்பட்டது..” என்று முதல் தகவல் அறிக்கை எழுதியது பழனிசாமியின் போலீஸ்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் தமிழக அரசின் வழக்கறிஞர் இதனைப் பூசிமெழுகப் பார்த்தார். ‘இது லாக்அப் மரணமே அல்ல’ என்று அன்றைய அமைச்சர் கடம்பூர் ராஜு சொன்னார்.

கண்ணால் பார்த்ததை வாக்குமூலமாகக் கொடுத்த தலைமைக் காவலர் ரேவதி மிரட்டப்பட்டார். சாத்தான்குளம் காவல் நிலையத்தில் இருந்த சி.சி.டி.வி. காட்சிகள் அழிக்கப்பட்டன. ஆதாரங்கள் மறைக்கப்பட்டன. இவ்வளவும் ஆட்சி மேலிடத்தின் உதவி இல்லாமல், உயர் காவல்துறை அதிகாரிகளின் தயவு இல்லாமல் சாதாரண காவலர்களால் செய்திருக்க முடியாது. ஊடகங்களில் ஏராளமான வீடியோ ஆதாரங்கள் வெளியானபிறகு சி.பி.ஐ. விசாரணைக்கு ஒத்துக்கொள்ள வேண்டிய நிலைக்கு பழனிசாமி நெருக்கடிக்குள்ளானார்.

சாத்தான்குளம் அரசு மருத்துவமனை மருத்துவர் தனது கடமையைத் தவறியுள்ளார் என்றும், முறையாக அவர் பரிசோதனை செய்யவில்லை என்றும் சி.பி.ஐ. விசாரணை சொல்கிறது. சாத்தான்குளம் அரசு மருத்துவமனை தொடக்க பதிவேடுகள், அடுத்தடுத்த மருத்துவப் பரிசோதனை அறிக்கைகள், கோவில்பட்டி சிறையில் அடைத்தபோது எழுதப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றுக்குள் முரண்பாடுகள் இருப்பதாகவும் சி.பி.ஐ. சொன்னது. இதுதான் பழனிசாமி ஆட்சியின் லட்சணம் ஆகும்.

**இப்படி அ.தி.மு.க. ஆட்சியில் மூடி மறைக்கப் பார்த்த வழக்குதான் சாத்தான்குளம் வழக்கு. அதனால்தான் சி.பி.ஐ. கேட்க வேண்டிய அவசியம் அன்று ஏற்பட்டது. ஆனால் இன்று கள்ளக்குறிச்சி விவகாரத்தில் எதையும் மறைக்கவில்லை. மறைக்கவில்லை.**

## கள்ளக்குறிச்சி விஷச் சாராய வழக்கில்

# மேலும் 3 பேர் கைது!

கள்ளக்குறிச்சி, ஜுன் 24 -

மாநிலம் முழுவதும், கள்ள சாராய விற்பனையில் ஈடுபடக்கூடிய நபர்களை மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு போலீசார் கைது செய்து வருகின்றனர்.

அந்த வகையில், சென்னை எம்ஜிஆர் நகரில் பதுங்கி இருந்த சிவக்குமார் என்பவரை மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு போலீசார் கைது செய்தனர். இவர் கள்ளக்குறிச்சி விஷ சாராய வழக்கில் தேடப்பட்டு வந்தவர் என்றும் கூறப்படுகிறது.

மேலும் கைது செய்யப்பட்ட சிவக்குமார் மீது பல்வேறு காவல் நிலையங்களில் கள்ள சாராய விற்பனை வழக்கு நிலுவையில் உள்ளது.

இதற்கிடையே, கள்ளக்குறிச்சி விஷ சாராய விவகாரத்தில் முக்கிய குற்றவாளியான மாதேஷ் நண்பர்கள் சக்திவேல் மற்றும் மீன் வியாபாரி கண்ணன் ஆகியோரை சி.பி. சி.ஐ.டி. போலீசார் கைது செய்துள்ளனர்.

மாதேஷ்க்கு மெத்தனால் கடத்த உதவியதாக சக்திவேல் மற்றும் கண்ணன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் சி.பி. சி.ஐ.டி. போலீசார் விசாரணை மேற்கொண்ட பின்னர் அவர்கள் அளிக்கும் வாக்குமூலத்தின் அடிப்படையில், இந்த வழக்கில் தொடர்புடைய மேலும் சிலர் சிக்குவார்கள் என கூறப்படுகிறது.



நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி 40க்கு 40 தொகுதிகளிலும் மாபெரும் வெற்றி பெற்றதையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (23.6.2024) முகாம் அலுவலகத்தில், காங்கிரஸ் மூத்தத் தலைவரும், முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப.சிதம்பரம் அவர்கள் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

## தூத்துக்குடி – ஒட்டப்பிடாரம் – கயத்தாறு – கோவில்பட்டி – புதூர் விளாத்திக்குளம் ஊராட்சி ஒன்றியங்களில்

# ரூ.515.72 கோடி மதிப்பீட்டில் கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள்!

## நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி ஆய்வு!

தூத்துக்குடி, ஜீன் 24 -

தூத்துக்குடி மாவட்டம் கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் சேதுராமலிங்கபுரத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலமாக ரூ.515.72 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் தூத்துக்குடி, ஒட்டப்பிடாரம், கயத்தாறு, கோவில்பட்டி, புதூர் மற்றும் விளாத்திக்குளம் ஆகிய ஒன்றியங்களை சேர்ந்த 363 குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடி நீர் திட்டப்பணிகளை கனிமொழி கருணாநிதி எம்.பி., மாவட்ட ஆட்சியர் லெட்சுமிபதி தலைமையில் பார்வையிட்டு ஆய்வு செய்து தெரிவிக்கையில்

தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி (61), ஒட்டப்பிடாரம் (88) கயத்தாறு (18) கோவில்பட்டி (22), புதூர் (83) மற்றும் விளாத்திக்குளம் (93) ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 363 குடியிருப்புகளுக் கான கூட்டுக் குடிநீர் திட்டம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் ரூ.515.72 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின்கீழ் பணிகள் நடைபெற்று வருகிறது.



இத்திட்டத்தின் தற்போதைய (2024), இடைக்கால (2039) மற்றும் உச்சகட்ட(2054) மக்கள் தொகைமுறையே 3,04,766 மற்றும் 3,50,821 மற்றும் 3,96,376 ஆகும். மேலும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55லிட்டர் வீதம், இடைக்கால மற்றும் உச்சகட்டகுடிநீர் தேவைகள் முறையே 13.59 மற்றும் 16.57 மில்லியன் லிட்டர் ஆகும்.

இத்திட்டத்தில் நாளொன்றுக்கு தேவையான 16.57 மில்லியன் லிட்டர் குடிநீரை தாமிரபரணி ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு கருங்குளம் ஒன்றியம் அகரம் ஊராட்சியைச் சார்ந்த அகரம் கிராமத்திற்கு அருகில் நீர் எடுக்கும் கிணறு ஒன்று அமைக்கப்பட்டு, அதிலிருந்து மின் மோட்டார் மூலம் குடிநீர் எடுக்கப்பட்டு சேதுராமலிங்கபுரம் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு, பின்னர் 239 குதிரைத்திறன் கொண்ட மின் மோட்டார் மூலம் 20.35 கி.மீ நீளமுள்ளநீர் உந்து குழாய்கள் பதிக்கப்பட்டு மணியாச்சியில் அமைந்துள்ள தரைமட்ட நீர் தேக்கத்தொட்டிக்கு குடிநீர் ஏற்றப்படுகிறது. மணியாச்சியிலுள்ள தரைமட்டநீர் தேக்கத் தொட்டியிலிருந்து 33 குதிரை த்திறன் கொண்டமின் மோட்டார் மூலம் மணியாச்சியில் அமைந்துள்ள உயர்மட்ட நீர்தேக்கத் தொட்டி மற்றும் 145 குதிரை த்திறன் கொண்டமின் மோட்டார் மூலம் 39 கி. மீநீளமுள்ளநீர் உந்து குழாய்கள் பதிக்கப்பட்டு மந்தித்தோப்பு உயர் மட்ட தொட்டிக்கும் குடிநீர் ஏற்றப்படுகிறது. இவ்விரண்டு உயர்மட்ட நீர்தேக்கத் தொட்டிகளில் இருந்து 42 ஊராட்சி தரை மட்ட நீர்தேக்கத் தொட்டிகளுக்கும் குடிநீர் வழங்கப்படுகிறது. அதிலிருந்து 60 புதிய மேல் நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கும், மேலும் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள 356 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கும் குடிநீர் ஏற்றப்பட்டு பொதுமக்களுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படவுள்ளது. மேலும் இத்திட்டத்தின் மூலம் 92,407 புதிய வீட்டுகுடிநீர் குழாய் இணைப்புகளும் வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கான பணி உத்தரவு 31.03.2023ல் வழங்கப்பட்டு தற்போது பணிகள் 73 விழுக்காடு முடிவடைந்து தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது இத்திட்டம் வருகின்ற அக்டோபர் 2024ல் முடிக்க ப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் பயன்பாட்டிற்கு வரும் பொழுது 3,96,376 மக்கள் பயன் அடைவார்கள் என்றார்.

அதனைத் தொடர்ந்து, கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கலியாவூர் கிராமத்தில் அமைந்துள்ள மருதூர் அணைக்கட்டை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

ஆய்வின் போது மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் அஜய்சீனிவாசன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் (ஊரகம்) ராஜா, செயற்பொறியாளர் (கீழ்தாமிரபரணி மற்றும் கோரம்பள்ளம் வடிநிலக்கோட்டம்) வசந்தி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் (ஊரகம்) உதவிசெயற்பொறியாளர் ஜான் செல்வன், உதவி செயற்பொறியாளர் (கீழ்தாமிரபரணி மற்றும் கோரம்பள்ளம் வடிநிலக்கோட்டம்) ஆதிமூலம், திருவை குண்டம் வட்டாட்சியர் சிவக்குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய (ஊரகம்) உதவி பொறியாளர் கங்காதரன், வல்லநாடு ஊராட்சி மன்றத் தலைவர் முருகன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி ‘இந்தியா’ கூட்டணியின் வேட்பாளர் அன்னியூர் ஏ.சிவாவுக்கு விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம் நேமூர் ஊராட்சி பகுதியில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்டப் பொறுப்பாளர் பொன் சிகாமணி ஆகியோர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர். உடன் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. மற்றும் கழக நிர்வாகிகள், திரளான கழகத்தினர், பொதுமக்கள் உள்ளனர்.